(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(5).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 நவெம்பர் 21 சனிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2015 நவெம்பர் 28, சனிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 36 ஆவது உறுப்புரையின் 1 ஆவது உப பிரிவின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் ஆளின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதிய உரிமையை பிரேரணையொன்றை அங்கீகரிப்பதன் ஊடாக உறுதி செய்துகொள்ளல் வேண்டும்.

அவ்வாறே ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் ஆளின் ஓய்வூதிய உரிமையானது அப்பதவியை இழப்பதற்கு முன்னர் உரித்துடையதாகவிருந்த சம்பளத்திற்குச் சமமான தொகையாக இருத்தல் வேண்டுமென 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, 1988 ஆம் ஆண்டு முதல் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜயவர்தன அவர்களுக்கும், டீ.பீ. விஜேதுங்க அவர்களுக்கும், முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களின் விதவை மனைவியான ஹேமா பிரேமதாச அம்மையாருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாருக்கும் செலுத்தப்பட்ட ஓய்வூதியம் ஜனாதிபதி அவர்களின் சம்பளத்திற்குச் சமமான தொகையான மாதமொன்றுக்கு ரூபா. 25,000/- ஆகும்.

2006 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி, 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அமுல்படுத்தப்பட்டமை காரணமாக பாராளுமன்றத்தில் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு 2006.07.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் சம்பளம் ரூபா 25,000/- முதல் ரூபா 97,500/- வரை அதிகரிக்கப்பட்டது. கௌரவ அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்களும் படிகளும் அதிகரிக்கப்பட்டன.

கௌரவ அமைச்சர்களின் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அல்லது படி அதிகரிப்புக்கு இணையான வகையில் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியமும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியவர்களின் சம்பள அதிகரிப்புக்கு ஏற்ப முன்னாள் ஜனாதிபதி சந்திக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாருக்குச் செலுத்தப்படும் ஓய்வூதியத்தில் மாத்திரம் எந்தவிதமான அதிகரிப்பும் ஏற்படவில்லை.

மேற்குறிப்பிட்டப்பட்ட சம்பள மறுசீரமைப்பின் பெறுபேறுகளாக அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு தற்போது செலுத்தப்படும் ரூபா 97,500/- மாதாந்த ஓய்வூதியத்திற்கமைய நோக்கும் போது, மாதாந்த ஓய்வூதியமாக ரூபா 25,000/- பெறும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரின் ஓய்வூதிய உரிமையில் முரண்பாடு தோன்றியுள்ளது.

மேற்குறிப்பிட்ட முரண்பாடுகளைச் சீர்செய்வது நியாயமான விடயமெனக் கருதுவதால்,

(அ) முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரின் ஓய்வூதியத் தொகையை ரூபா 25,000/- முதல் ரூபா 97,500/- வரை அதிகரித்து முரண்பாட்டை சீர்செய்வதற்கும்;

(ஆ) முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களின் விதவை மனைவியான ஹேமா பிரேமதாச அம்மையாருக்கு ஓய்வூதியத் தொகையான ரூபா 97,500/- இன் 2/3 இற்குச் சமமான மாதாந்த ஓய்வூதியத்தைச் செலுத்துவதற்கும்;

(இ) 2016.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மேலே குறிப்பிட்ட ஓய்வூதிய உரித்தினை மறுசீரமைப்புச் செய்வதற்கும்;

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 36 ஆவது உறுப்புரையின் (1) வது உப பிரிவின் பிரகாரம் இத்தால் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 13(1) (ஈ) என்னும் பிரிவுடனும் 16 பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 112 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மார்ச்சு மாதம் 25 ஆம் திகதிய 1907/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வை தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1933/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்திவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(975, 976 மற்றும் 977 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினது சிபாரிசின் பேரில் 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு சக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015.06.08 ஆம் திகதிய 1918/2 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது 2 ஆம் பிரிவின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஓகத்து மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2015 திசெம்பர் 01, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

194/ '15

கௌரவ ஜயந்த சமரவீர,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டமை காரணமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வரும் தவறுகளுக்காக சந்தேக நபர்களாகக் கருதப்பட்டுள்ளவர்கள் மற்றும் தண்டனைக்குட்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ஆ) இவர்களின் பெயர், தவறின் தன்மை, இவர்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகள் மற்றும் சிறைக்கூடங்களின் இலக்கங்கள் கைதிகளுக்கேற்ப யாவையென்பதை வெவ்வேறாக அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) 2015 சனவரி முதல் 2015 ஒக்டோபர் 20 வரையிலான காலகட்டத்தினுள் பிணை வழங்கப்பட்டுள்ள மற்றும் விடுவிக்கப்பட்டுள்ள எல்.ரீ.ரீ.ஈ. சந்தேகநபர்கள் மற்றும் கைதிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இவர்களின் பெயர்கள், பிணை வழங்கிய அல்லது விடுவித்த நீதிமன்றம், சிறைச்சாலை மற்றும் விடுவிக்கப்பட்ட திகதி ஒவ்வொரு ஆள் சார்பிலும் வெவ்வேறாக யாதென்பதை அவர் மேலும் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(உ) (i) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாத செயல்களுடன் தொடர்புடைய தவறுகளுக்கு தண்டனை பெற்றவர்களை அரசியல் கைதிகளாக கருதுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு தீர்மானிப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

195/ '15

கௌரவ விஜித ஹேரத்,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) வவுனியா மாவட்டத்தின் போகஸ்வெவ வலயத்தில் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியமர்த்துவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் 312 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இவ்வேலைத்திட்டத்தின் கீழ் இவர்களுக்கு 1 ஏக்கர் மேட்டு நிலமும் 1 ஏக்கர் வயற்காணியும் பெற்றுக்கொடுக்க உத்தேசமாயிருந்தது என்பதையும்;

(iii) தற்போது 3 வருடங்கள் கடந்துள்ள போதிலும், மேற்கூறப்பட்டவாறு காணியெதுவும் வழங்கப்படவில்லையென்பதையும்;

(iv) தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளதால் இவர்கள் மிகவும் நிர்க்கதியான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த நிலைமையை சீர்செய்வதற்கு துரித நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

246/ '15

கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபைக்கு 2015.01.30 ஆம் திகதிக்குப் பின்னர் நியமிக்கப்பட்ட தவிசாளரால் கடந்த 10 மாத காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதாந்த சம்பளம் / எரிபொருள் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தமக்கு உரித்தான சம்பளம் / எரிபொருள் மற்றும் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக தவிசாளரால் ஏதேனும் பணம் / கொடுப்பனவு பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், அவை மீள அறவிடப்படுமா என்பதையும்;

(iii) 2015.01.30 முதல் 2015.10.30 வரையிலான காலப்பகுதியினுள் வைபவங்களுக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 02, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

88/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கைச் சட்டக் கல்லூரியின் கற்கை நடவடிக்கைகளும் பரீட்சை நடவடிக்கைகளும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இடம்பெறுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டில் சட்டக் கல்லூரி மாணவர்களின் பரீட்சை வினாத் தாள்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததால் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் கல்வி கற்ற மாணவர்களுக்கு திடீரென ஆங்கில மொழிக்கு மாற வேண்டிய நிலை ஏற்பட்டமையால் அம் மாணவர்களுக்கு பெரும் அநீதியும் சிரமமும் ஏற்பட்டதென்பதையும்;

(ii) இந்த விடயத்தினால் முன்னாள் பிரதம நீதியரசர் அரச கரும மொழிக் கொள்கையை மீறியுள்ளாரென்பதையும்;

அவர் மேலும் அறிவாரா?

(இ) இனி வரும் காலங்களில் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற வினாத் தாள்கள் அரச கரும மொழிக் கொள்கைக்கமைய, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்குவாரா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

127/ '15

கௌரவ விஜித ஹேரத்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹட்டன் நகரத்தின் தும்புறுகிரிய பிரதேசத்தில் உலக வங்கியின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் சுமார் 35 சிங்கள், தமிழ் மற்றும் முஸ்லிம் குடும்பங்கள், 33 வருடங்களுக்கும் மேல் குடியமர்ந்துள்ளார்கள் என்பதையும்;

(ii) மேற்படி குடியிருப்பாளர்களில் ஒரு பகுதியினருக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் சட்டபூர்வமான காணி உறுதிகள் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) வட்டவல பெருந்தோட்டக் கம்பனி இவர்களை வீடுகளிலிருந்து அகற்றி, மேற்படி காணிப் பிரதேசத்தை கம்பனிக்கு சுவீகரித்துக் கொள்வதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஹட்டன் – டிக்கோயா நகர சபை மேற்படி குடியிருப்பாளர்கள் வசிக்கின்ற காணியை சுவீகரித்துக் கொள்வதற்கு ஏகமனதாக பிரேரணையொன்றை நிறைவேற்றியுள்ளது என்பதையும்;

(ii) இக்காணிப் பிரதேசத்தை கம்பனிக்கு சுவீகரித்துக் கொள்வதைத் தடுத்து நியாயத்தை நிறைவேற்றுவதற்காக மேற்படி குடியிருப்பாளர்கள், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, காணி சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளை விழிப்புணர்வூட்டியுள்ளார்கள் என்பதையும்;

அவர் மேலும் அறிவாரா?

(இ) (i) இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு வட்டவல கம்பனியின் அழுத்தங்களிலிருந்து மேற்படி குடியிருப்பாளர்களை விடுவித்து இவர்களின் வீட்டு உரிமையை உறுதி செய்துகொடுக்கும் பொருட்டு தலையீடு செய்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

148/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) விஞ்ஞானம், தொழில்நுட்பம், வணிகவியல் மற்றும் கலை ஆகிய நான்கு பாடத்திட்டங்களின் கீழ் தற்சமயம் அண்ணளவாக இரண்டாயிரம் மாணவர்கள் கல்வி கற்கும் மாத்தறை மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் பெரும் கட்டிட இட நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதென்பதையும்;

(ii) விடுதி, கேட்போர்கூடம் மற்றும் புதிய மூன்று மாடிக் கட்டிட நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கடந்த சனவரி மாதம் 15 ஆம் திகதி முதல் மேற்படி அனைத்து நிர்மாணிப்புகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) விளையாட்டு மைதானத்திற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்ட போதிலும், இதன் நிர்மாணிப்புகள் தாமதமடைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வித்தியாலயத்தின் விடுதியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(iii) நிறுத்தப்பட்டுள்ள ஏனைய நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்கு அத்தியாவசியமான விளையாட்டு வசதிகளுக்கான மைதானத்தை அமைத்துக்கொடுப்பாரா என்பதையும்;

(v) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மாத்தறை மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தை மூடுவதற்கு முயற்சி செய்யப்படுவதாக பரவும் தகவல் உண்மையானதா பொய்யானதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

199/ '15

கௌரவ ( டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஏப்ரல் 05 ஆந் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை கொலொம்பியாவில் நடைபெற்ற உலக நகர மாநாட்டில் (WUF) கலந்துகொண்ட இலங்கை (அரசின்) பிரதிநிதிகள் குழுவின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அப்போது அவர்கள் வகித்த அரச பதவிகள் யாவையென்பதையும்;

(iii) அந்த பிரதிநிதிகள் குழு தெரிவுசெய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) அந்த விஜயத்திற்காக செலவிடப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும்;

(v) ஒவ்வொருவருக்காக ஏற்ற செலவுகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த விஜயத்தில் பாடசாலை மாணவர் ஒருவரும் கலந்துகொண்டாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவரது பெயர், பாடசாலை, அவரது அப்போதைய வயது என்பன யாவை என்பதையும்;

(iii) அவருக்கு மாத்திரம் அந்த வாய்ப்பு வழங்கப்பட்டமைக்கான விசேட காரணம் யாதென்பதையும்;

(iv) குறிப்பிட்ட விஜயத்திற்காக அந்த மாணவன் கல்வி அமைச்சின் அனுமதியைப் பெற்றிருப்பின் அந்தக் கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) இந்த விஜயத்திற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருப்பின் அந்தக் கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பரா?

(இ) இன்றேல், ஏன்?

200/ '15

கௌரவ அநுர திஸாநாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் போதிக்கப்படும் கற்கை நெறிகள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான ஒவ்வொரு கற்கை நெறியையும் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை கல்வியாண்டின் படி தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் பயிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை கல்வியாண்டின்படி தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) மருத்துவ பீடத்திற்கு வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான பிரமாணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு மாணவர்களின் பெயர்கள், இவர்கள் எந்த நாட்டின் பிரஜைகள், பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமைகள் மற்றும் இவர்களிடமிருந்து அறவிட்ட தொகை கல்வியாண்டின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி பல்கலைக்கழகத்தில் தாதியர் கற்கை நெறியில் பயிலும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், உயர் தர பாடத்துறை, உயர் தரப் பெறுபேறு மற்றும் 'Z' பெறுமானம் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

202/ '15

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகார சபையின், வளவை விசேட வலயத்தில் வாழும் மக்களுக்கு அவர்கள் வாழும் காணியின் சட்டரீதியான உரிமை கையளிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) கடந்த காலப்பகுதியில் அரசியல் நட்பின் அடிப்படையில் உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) தற்போது இந்த காணி உரிமையாளர்களுக்கு உறுதி வழங்குவதற்காகவெனக் கூறிக்கொண்டு காணி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்;

(iv) இந்த முறைமையில் வெளிப்படைத்தன்மை காணப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வலயத்தைச் சேர்ந்த காணி உரிமையாளர்களது எண்ணிக்கை யாது என்பதையும் ;

(ii) இவர்களில் இதுவரையில் உரித்துறுதிகள் வழங்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்களது எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைப் பத்திரம் வழங்குதல் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீடு மேற்கொள்ளப்படும் அடிப்படை யாது என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இதுவரையில் உரித்துறுதிகள் வழங்கப்படாத காணி உரிமையாளர்களுக்கு வெளிப்படைத்தன்மையுடன் உரித்துறுதிகளை வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டமொன்று காணப்படுமாயின், அது யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2015 திசெம்பர் 03, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

90/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உயர்நீதிமன்ற நீதிபதி கௌரவ சிராணி திலகவர்தனவின் தலைமையில் நியமிக்கப்பட்ட ஆயுதக் கடத்தல் தொடர்பாக ஆராய்வதற்கான ஆணைக்குழுவின் அறிக்கையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அறிக்கையை வெளியிடுவாரா என்பதையும்;

(iii) வெளியிடுவதாயின், அது எப்போதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

151/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 செப்தெம்பர் 30 ஆம் திகதியளவில் தொழிலற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பட்டதாரிகளின் எண்ணிக்கை, அவர்கள் பெற்றுள்ள பட்டங்களுக்கு அமைய தனித்தனியே யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தற்போதைய அரசாங்கத்திடம் காணப்படுகின்ற வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அதற்கமைய 2015 ஆம் ஆண்டுக்காக ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்த்துள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது பதியப்பட்டுள்ளவாறு அரச சேவையின் பட்டதாரிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2015 முதல் 2019 வரையான ஐந்து ஆண்டுகளினுள் பல்கலைக்கழகங்களின் ஊடாகவும், வெளிவாரிப் பாடநெறிகளின் மூலமும் பட்டம் பெறவுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி ஆண்டுகளுக்கு அரச சேவையில் இவர்களுக்காக உருவாக்கப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

196/ '15

கௌரவ விஜித ஹேரத்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) ஒருங்கிணைந்திருந்த வட - கிழக்கு மாகாண சபை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளாகப் பிரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாணத்தின் நிரந்தர குடியிருப்பாளர்களான 270 உத்தியோகத்தர்கள் வட மாகாண சபைக்கு இணைக்கப்பட்டனர் என்பதையும்;

(ii) சுமார் ஏழு வருட காலமாக மேற்கூறப்பட்டவாறு வதிவிடப் பிரதேசத்திற்கு வெளியில் பணியாற்றுவதன் மூலம் மேற்படி உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்கள் கிழக்கு மாகாணத்திற்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்காக பல சந்தர்ப்பங்களில் முயற்சியெடுத்துள்ள போதிலும் அது பயனளிக்கவில்லையென்பதையும்;

(iv) ஒருசில உத்தியோகத்தர்கள் மட்டும் அதிகாரிகளின் ஒத்துழைப்பைப் பெற்று இடமாற்றங்களைப் பெற்றுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கிழக்கு மாகாண குடியிருப்பாளர்கள் அம் மாகாண சபையில் பணியாற்றுவதற்காக மேற்கொள்ளும் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றுவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

201/ '15

கௌரவ அநுர திசாநாயக்க,— தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தலைவரினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களினதும் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இவர்களுடைய கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) தற்போதைய ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தலைவர் இதற்கு முன்னர் அரச நிறுவனங்களில் அல்லது தனியார் நிறுவனங்களில் வகித்த பதவிகள் யாவை என்பதையும்;

(iv) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் மற்றும் விளம்பரப்படுத்தல் தொடர்பாக இவர் கொண்டுள்ள அனுபவங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் தலைவர் பதவிக்கான சம்பளத்தை அதிகரிப்பதற்கு கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் பணிப்பாளர் சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத் திகதியில்; எந்த அளவில் என்பதையும்;

(iii) தற்போதைய ஸ்ரீ லங்கா ரெலிகொம் தலைவரின் அடிப்படைச் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) இவருடைய மொத்தச் சம்பளம் எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

206/ '15

கௌரவ ஹேஷா விதானகே,— மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) இலங்கையில் தோட்டங்களைச் சார்ந்து வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் தொடர்பாகவும், தோட்டங்களைச் சார்ந்த லயன் அறைகள் தொடர்பாகவும் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், தோட்டங்களைச் சார்ந்த வீடுகள், லயன் அறைகள் மற்றும் அவற்றைச் சார்ந்து வாழ்ந்து வருகின்ற மக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இவர்களில் பாடசாலைக்குச் செல்கின்ற வயதைச் சேர்ந்த பிள்ளைகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களுள் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மின்சார வசதிகள் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகள் இல்லாத குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) (i) தோட்டங்களைச் சார்ந்து வாழ்ந்துவருகின்ற தமிழ் மக்களின் பொது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(iii) தோட்டங்களைச் சார்ந்துள்ள மக்களின் லயன் அறைகளை மையமாகக் கொண்ட வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவந்து இவர்களை முறைசார்ந்த வீடுகளில் குடியமர்த்துவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டத்தை நிறைவு செய்ய உத்தேசிக்கின்ற காலம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 04, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

91/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் சீமெந்தின் விற்பனை விலையினுள் உள்ளடங்கியிருந்த ரூபா 90.00 வரி அகற்றப்பட்டது சீமெந்தின் விலையைக் குறைப்பதற்கானதொரு வழிமுறையல்ல என்பதையும்;

(ii) இதன் காரணமாக மாதமொன்றுக்கு அரசாங்கம் இழந்த வரி வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி விலை குறைப்பு 2015 பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு, சில்லறை விலை ரூபா 840.00 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அன்று முதல் இன்று வரை குறித்த விலையில் நாடளாவிய ரீதியில் சீமெந்து விற்பனை செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) இன்றேல், அரசாங்கத்தின் வருவாயும் இழக்கப்பட்டு நுகர்வோருக்கு அளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட நிவாரணமும் கிடைக்கப்பெறாமை பாரிய ஒரு தவறாக அமையாதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு மேற்படி விலை குறைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கை அமுல்படுத்தப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

153/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தோட்டப்புற தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு பாடசாலைகளின் அடிப்படையில் ஆசிரிய உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டதையடுத்து, அகலவத்தை, வியன்கல்ல, 25 /2 ஆம் இலக்க வீட்டில் வசிக்கும் திருமதி. எவ். ருஷானா மயூர் விண்ணப்பப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்தார் என்பதையும்;

(ii) அதன் பிரகாரம் அவர் நேர்முகப் பரீட்சையின் நிமித்தம் 2015.03.02 ஆம் திகதி அழைப்பு இக்கம் 199 (B) யின் கீழ் தோற்றினார் என்பதையும்;

(iii) இவர் வசிக்கும் பிரதேசத்தின் தோட்டப்புற பாடசாலைகளில் மேற்படி பதவிக்கான வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் திருமதி. ருஷானா மயூருக்கு இதுவரை ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவருக்கு ஆசிரிய உதவியாளர் நியமனத்தைத் தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

197/ '15

கௌரவ விஜித ஹேரத்,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2003 ஆம் ஆண்டு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தும் போது அதில் பணியாற்றிய 3100 ஊழியர்களில் சுமார் 1500 பேர் தொழில்களை இழந்தனர் என்பதையும்;

(ii) ஏதேனும் நிறுவனமொன்று 'பர்க்' நிறுவனத்தின் ஊடாக விற்பனை செய்யப்படும் போது ஊழியர்களுக்கு உரித்தாக வேண்டிய 10% நலனையும் இவர்கள் இழந்தார்கள் என்பதையும்;

(iii) உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்பின்படி கடந்த ஆட்சிக்காலத்தில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மீண்டும் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட போதிலும் தொழில் இழந்த ஊழியர்கள் அனைவரும் மீண்டும் சேவையில் அமர்த்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மீண்டும் தொழில் கிடைக்காத காரணத்தினால் அநீதிக்கு உள்ளான ஊழியர்களுக்கு தீர்வொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

203/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பொது நிர்வாக, முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) பட்டதாரி பயிலுனர்களுக்கு, அபிவிருத்தி சேவைப் பிரமாணங்களுக்கமைய நிரந்தர நியமனங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு 12/0030/523001 ஆம் இலக்க 2013.01.10 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி அங்கீகாரம் கிடைத்துள்ளதென்பதையும்;

(ii) இவ்வாறு தென் மாகாண சபை நிரந்தர அரச சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களின் நியமனத் திகதியாக, ஒராண்டு பயிற்சிக் காலம் நிறைவடைந்த திகதி அல்லது இத்திகதி அரசாங்க விடுமுறை தினமாகுமெனில், இதன் பின்னர் வருகின்ற முதலாவது கடமை நாள் கருதப்படல் வேண்டுமென, இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் தமது 2014.11.18 ஆம் திகதிய CS/DOS/21 ஆம் இலக்க கடிதம் மூலம் தென் மாகாண பிரதம செயலாளருக்கு அறிவித்துள்ளார் என்பதையும்;

(iii) தென் மாகாண பிரதம செயலாளரின் CSS/2/13/GRAD/1-V ஆம் இலக்க 2014.08.12 ஆம் திகதிய தீர்மானத்தின் படி, G/SP/12/08 ஆம் இலக்க 2014.11.18 ஆம் திகதிய ஆளுநரின் தீர்மானத்தின் மூலம், மாத்தறை மாவட்டத்திற்கு ஆட்சேர்க்கப்பட்ட 313 பட்டதாரி பயிலுனர்கள் ஒராண்டு பயிற்சிக் காலத்தின் பின்னர் நிரந்தர நியமனத்திற்கான உரிமையைப் பெற்றுள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) தென் மாகாண நிரந்தர அரச சேவைக்கு பட்டதாரி பயிலுனர்களை உள்ளீர்த்து, அவர்களுக்குரிய நிலுவைச் சம்பளம் மற்றும் சேவைக் காலத்தை பெற்றுக்கொடுக்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 05, சனிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

92/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) படை உறுப்பினர்களது பிள்ளைகளுக்காக ஒதுக்கப்பட்ட பாடசாலைகள் தனியாகப் பேணிவரப் படுகின்ற கொள்கையை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்?

(ஆ) இராணுவத்தின் தியாகிகளான, உத்தியோகத்தர்கள் மற்றும் படைவீரர்கள் ஆகிய இரு பிரிவினருக்கும் சிறப்புரிமைகளை பெற்றுக்கொடுத்தல் அவசியமாயிருந்த போதிலும் இவர்களின் பிள்ளைகளுக்கு தனியான பாடசாலைகள் காணப்படுவதன் மூலம் சமூகத்தில் புதிய சமூக வகுப்பொன்றின் அடிப்படையில் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படுவதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் மற்றும் படைவீரர்களின் பிள்ளைகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இத்தகைய பாடசாலைகளை கல்வித் திணைக்களத்தின் கீழ் கொண்டுவந்து ஏனைய மாணவர்களையும் சேர்த்துக்கொண்டு பேணிவருவதையிட்டு பரிசீலிக்காமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

162/ '15

கௌரவ சந்திம கமகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி வலயங்களில் குடியமர்த்தப்பட்ட ஆரம்ப விவசாயக் குடும்பங்கள் இன்றளவில் தமது மூன்றாவது பரம்பரை வரை வியாபித்துள்ளதென்பதையும்;

(ii) இவர்கள் இன்றளவில் தமது தந்தைக்கோ அல்லது சகோதரர்களுக்கோ சொந்தமான 2½ ஏக்கர் விளைநிலத்தை கூட்டாகப் பயிர்செய்து ஈட்டிக்கொள்கின்ற சிறிதளவு வருமானத்தைக்கொண்டு மிகவும் சிரமத்துடன் வசிக்கின்றனரென்பதையும்;

(iii) ஆரம்பக் குடியிருப்பாளர்களுக்கு குடியமர்வதற்காக வழங்கிய ½ ஏக்கர் நிலப்பரப்பில் இந்த மூன்று பரம்பரையினரும் சிறிய வீடுகளை அமைத்துக்கொண்டு மிகுந்த சிரமத்துடன் வசிக்கின்றனரென்பதையும் அவர் அறிவாரா;

(iv) இன்றேல் ஏன்?

(ஆ) (i) இக்குடும்பங்களுக்கு புதிதாக விளைநிலங்களையும் குடியமர்வதற்கான காணிகளையும் வழங்குவதற்கான திட்டமொன்று உள்ளதா;

(ii) ஆமெனில், அத்திட்டம் அமுலாக்கப்படும் திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மகாவலி திட்டத்தில் உள்ள இற்றைவரை பாவனைக்கு எடுக்கப்படாத காணிகளின் அளவு யாது ;

(ii) அவ்வொதுக்கங்கள் யாவை;

(iii) ஏதேனும் விசேட அனுமதியின் பேரில் அவ்வொதுக்கங்களிலிருந்து வெளித்தரப்பினருக்கு அனுமதிப்பத்திர அடிப்படையில் அல்லது குத்தகை அடிப்படையில் காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iv) ஆமெனில், அக்காணிகளின் அளவு யாது;

என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 07, திங்கட்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

39/ '15

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை (மேற்படி இரண்டு ஆண்டுகளையும் உள்ளிட்டதாக) 5 ஆண்டுகளினுள் மத்தியகிழக்கு நாடுகளில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு இலக்காகிய இலங்கைப் பெண்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் தனித்தனியாக எவ்வளவு;

(ii) அப்பெண்கள் பணியாற்றிய மத்தியகிழக்கு நாடுகள் யாவை;

(iii) மேற்படி பெண்களுக்காக அந்நாடுகளில் இலங்கைத் தூதரகங்கள் ஊடாக மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒவ்வொரு பெண் தொடர்பிலும் தனித்தனியாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாலியல் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அத்தகைய ஒவ்வொரு ஆளுக்கும் எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் தனித்தனியாக யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெளிநாடுகளுக்கு செல்கின்ற இலங்கைப் பெண்களின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) இலங்கைப் பெண்கள் வீட்டுப் பணிகளுக்காக வெளிநாடு செல்வதை மட்டுப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

132/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கூட்டுறவுச் சங்க இயக்கம் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை அப்போதைய சனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி அறிக்கை இதுவரை வெளியிடப்படாதிருப்பின் அதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) அதனை பொதுமக்களின் கைகளுக்குக் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

42/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் வருடாந்த சந்தனக் குச்சி மற்றும் நறுமணப் புகைத் தூள் பாவனை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இத்தொகையில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மற்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சந்தனக் குச்சி மற்றும் நறுமணப் புகைத் தூள் உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) இந்த மூலப்பொருட்கள் மனித உடலுக்கு பாதகமானதா இல்லையா என்பதைப் பற்றி பரிசோதிப்பதற்கு நாட்டில் நிறுவனமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) இந்நிறுவனத்தினால் பரிசோதிக்கப்படுகின்றபோது மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் மூலப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டு சந்தனக் குச்சிகள் மற்றும் நறுமணப் புகைத் தூள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சந்தனக் குச்சிகள் மற்றும் நறுமணப் புகைத் தூள் உற்பத்தியின்போது மனித உடலுக்கு பாதகமான இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

181/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தினுள் இனங்காணப்பட்டுள்ள எச்.ஐ.வீ. (HIV) தொற்றியவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு ஆண்டின் படி வெவ்வேறாக எவ்வளவு;

(ii) 2015.10.30 ஆம் திகதியளவில் இனங்காணப்பட்டுள்ள மொத்த HIV தொற்றியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ;

(iii) தற்போது இனங்காணப்பட்டுள்ள மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை, வயதுப் பிரிவுகளின் படி (வயது 10-15, 16-20, 21-30, 31-40 மற்றும் 40க்கு மேல்) வெவ்வேறாக எவ்வளவு;

(iv) இவர்களுக்கு மத்தியில் உள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(v) இவர்களுக்கு HIV தொற்றிய முறை குறிப்பிட்ட எண்ணிக்கைகளுடன் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) குருதி மாற்றூட்டலினூடாக தொற்றுக்கு ஆளான நோயாளிகளுக்காக அரசாங்கம் கடைப்பிடிக்கும் சட்ட நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 08, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

45/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இயங்கி வந்த அம்பாந்தோட்டை வாடி வீடு தனியார் துறைக்கு உரித்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அங்கு பணியாற்றிய ஊழியர்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) இச் செயற்பாடு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு நிதி சார்ந்ததொரு நட்டம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வாடி வீட்டினை மீண்டும் நகர அபிவிருத்தி அதிகாரசபை சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

133/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச பல்கலைக்கழகங்கள் அல்லாத நிறுவனங்களினால் நடத்தப்படும் பொறியியல், கணக்கீடு மற்றும் பிற தொழில்வாண்மை கற்கைநெறிகளின் எண்ணிக்கை நிறுவன ரீதியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் ஒவ்வொரு கற்கை நெறிக்காகவும் அறவிடும் கட்டணம் தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ்வரும் பல்கலைக்கழகங்களில் கட்டணம் அறவிட்டு நடத்தப்படும் கற்கை நெறிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கற்கைநெறி மற்றும் கற்கை நெறிக்காக அறவிடும் கட்டணம் தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை மேற்படி கட்டணங்களில் செய்யப்பட்ட மாற்றங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

52/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புகளுக்கு மாணவிகளை அனுமதிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படுகின்ற அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டில் கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் உயர் தர வகுப்புக்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவிகள் கல்வி கற்பதற்குள்ள பாடப் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடப் பிரிவு தொடர்பாகவும், புதிய உயர் தர மாணவிகளுக்குள்ள வகுப்புக்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு வகுப்பிலும் இருக்கின்ற மாணவிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) 2015 ஆம் ஆண்டில் உயர் தரம் கற்பதற்காக கொழும்பு விசாகா வித்தியாலயத்திற்கு வேறு வித்தியாலயங்களிலிருந்து அனுமதிக்கப்பட்டுள்ள மாணவிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ) (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு மாணவியினதும் பெயர், மாவட்டம், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை மற்றும் உயர்தர பரீட்சைக்காக கல்வி கற்கின்ற பாடப் பிரிவு ஆகியன தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) விசாகா கல்லூரிக்கு அனுமதி பெறுவதற்காக மேற்படி ஒவ்வொரு மாணவிக்கும் காணப்பட்ட தகைமைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

182/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் ஒழுங்கு விதிகள் இலக்கம் 1 இன் 4 (2) அத்தியாயத்தின் கீழ் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு 2014.03.21 ஆம் திகதிய 1854/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பயங்கரவாத செயல்களுடன் தொடர்புடையதென பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அமைப்புகளின் எண்ணிக்கை மற்றும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஏற்புடைய அமைப்புகளினதும் ஆட்களினதும் அனைத்துத் தகவல்களும் அடங்கிய விபரமொன்றை சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) LTTE அமைப்பினால் 1976 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் செயல்கள் சம்பந்தமாக, இலங்கை பொலிஸ் மேற்படி ஆ (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புகள் மற்றும் ஆட்கள் சம்பந்தமாக புலனாய்வுகளை ஆரம்பித்துள்ளதா என்பதையும்;

(ii) ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையினால் 2001 செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட 1373 ஆம் இலக்க பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்புடைய சந்தேக நபர்களை எமது நாட்டுக்கு பெற்றுத் தரும்படி ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ நாடுகளிடம் வேண்டுகோள் விடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் , ஏன்?

---

## 2015 திசெம்பர் 09, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

50/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டுத் தேயிலையுடன் வெளிநாட்டுத் தேயிலை கலப்படம் செய்யப்பட்டு வெளிநாட்டுச் சந்தைக்கு அனுப்பப்படுகின்றதென்பதையும்;

(ii) தேயிலையில் இருக்கவேண்டிய தரம் வீழ்ச்சியடைந்துள்ளதென்பதையும்;

(iii) பல்வேறு பொருட்கள் கலப்படம் செய்யப்பட்ட தேயிலை ஏலவிற்பனைக்காக முன்வைக்கப்படுகின்றதென்பதையும்;

(iv) இதன் மூலமாக உலகில் முதலிடத்தை வென்றுள்ள Ceylon tea பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015.01.01 ஆந் திகதியில் உள்ளவாறு இந்நாட்டின் தேயிலை ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) இவர்கள் 2014 ஆம் ஆண்டில் ஏற்றுமதிசெய்த தேயிலையின் அளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) தேயிலைச் சபையினால் தேயிலை உற்பத்திகளின் தரம் பற்றி பரிசோதிக்கின்ற முறையியல் யாது என்பதையும்;

(ii) தேயிலை உற்பத்திகளின் தரம் பற்றி குற்றஞ்சாட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய ஒருவருக்கு வழங்கக்கூடிய உயர்ந்தபட்சத் தண்டனை யாதென்பதையும்;

(iv) தண்டனை பெற்ற உற்பத்தியாளர்கள் மேற்படி (ஆ) (ii) பட்டியலில் உள்ளனரா என்பதையும்;

(v) இது சம்பந்தமாக நாட்டில் நிலவுகின்ற சட்ட ஏற்பாடுகள் போதுமானதாக அமைகின்றனவா என்பதையும்;

(vi) இன்றேல், அச்சட்டங்களை திருத்தத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி திருத்தங்கள் எவ்விதமாக எத்திகதியில் மேற்கொள்ளப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

89/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க.பொ.த.(சா.தரம்) சித்தியடைந்த இளைஞர் யுவதிகளை அரசாங்க அல்லது தனியார்துறையில் தொழில்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய முன்னர் அவர்களின் திறமைகள் மற்றும் ஆற்றல்களின் அடிப்படையில் இலவசமாக கைவினை அல்லது வாழ்க்கைத் தொழிற்பயிற்சியை வழங்குவதற்காக தற்போதுள்ள வசதிகள் போதுமானவையா;

(ii) அவ்வாறு இல்லாவிடின், அதிகரிக்கப்படவேண்டிய வசதிகளின் அளவு யாது;

(iii) வாழ்க்கைத் தொழில் மற்றும் கைவினைப் பயிற்சிக்காக உள்ள பாடத்திட்டங்கள் தற்காலத்திற்கு எந்தளவில் பொருத்தமாயுள்ளன; அவ்வாறின்றேல் போதுமானதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி பயிற்சிபெறுனர்களை எவ்விதமான அரசியல் அழுத்தமும் இன்றி, தகைமைகள் மற்றும் திறமைகளின் அடிப்படையில் மாத்திரம் அரச அல்லது தனியார்துறை தொழில்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான கொள்கை அல்லது பொருத்தமான முறையியலொன்றை தயாரிப்பாரா;

(ii) அரசாங்க வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகையில் நிரப்பப்பட உள்ள பதவிகளின் எண்ணிக்கையை அந்த அறிவித்தலுடன் பிரசுரிப்பதால் இளைஞர் யுவதிகள் அநாவசியமான எதிர்பார்ப்புக் குன்றுதல் களுக்கு உள்ளாவதை தவிர்க்க இயலுமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா;

(iii) ஆமெனில், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

கௌரவ புத்திக பத்திறண,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புல்ல விசேட பொருளாதார நிலையத்திற்கு கொண்டுவரப்படுகின்ற மரக்கறிகளுக்காக நியாயமான விலை கிடைப்பதில்லை என்பதையும்;

(ii) கப்பம் வாங்குபவர்களும் இடைத்தரகர்களும் விவசாயிகளுக்கு மோசடிகள் புரிகின்றனரென்பதையும்;

(iii) அரசியல் பாதுகாப்பின் பேரில் கப்பம் வாங்குபவர்கள் இயங்கிவருகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பொருளாதார நிலையத்தில் விவசாயிகளுக்கு நியாயமான விலையைப் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாது;

(iii) நிலையத்தில் இயங்கிவருகின்ற கப்பம் வாங்குபவர்களை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(iv) ஆமெனில், அது எவ்விதத்தில்;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டமைக்கான நோக்கங்களும் இலக்குகளும் யாவை;

(ii) இன்றளவில் அந்நோக்கங்களும் இலக்குகளும் வென்றெடுக்கப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி நிலையத்தில் உள்ள கடை அறைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் உரிமையாளர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை;

(iii) மேற்படி உரிமையாளர்களிடமிருந்து அரசாங்கம் அறவிடுகின்ற வரித்தொகை எவ்வளவு;

(iv) இந்த கடை அறைகள் கீழ்வாடகைக்கு விடப்பட்டுள்ளனவென்பதை அறிவாரா;

(v) ஆமெனில், அது சட்டவிரோதமானதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(vi) விவசாயிகள் அமைப்புக்களுக்கும் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்திற்கும் வழங்கப்பட்டிருந்த கடை அறைகள் இரண்டிலுமிருந்து அவர்கள் ஏன் அகற்றப்பட்டார்கள்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

183/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனைத்து பிரதேச செயலக மட்டங்களிலும் பிரதேச இணைப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டு அவை மாதத்திற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டுமென பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) கடந்த முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தினுள் மேற்படி பிரதேச இணைப்புக் குழுக்கள் வெற்றிகரமாக செயற்பட்டதென்பதையும்;

(iii) பிரதேச இணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படாவிடின் சம்பந்தப்பட்ட பிரிவுகளினுள் அரசியல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதற்கு அதன் மூலம் பாரிய தாக்கம் விடுக்கப்படலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சுற்றுநிருபத்தின் படி 2015 ஆம் ஆண்டுக்காக தாபிக்கப்பட்டுள்ள பிரதேச இணைப்புக் குழுக்கள் யாவையென்பதையும்;

(ii) 332 பிரதேச இணைப்புக் குழுக்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ள தவிசாளர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டில் மேற்படி பிரசேத இணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்ட தடவைகள் மற்றும் தேதிகள் யாவையென்பதையும்;

அவர் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) 2015 ஆம் ஆண்டில் மாவட்ட இணைப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி மாவட்ட குழுக்களின் தவிசாளர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை மற்றும் தேதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

# 2015 திசெம்பர் 10, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

57/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.05.30 ஆந் திகதியளவில் அரச நிறுவனங்களிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக இருந்த பணத்தொகை யாது;

(ii) அப்பணத்தொகை அறவிடப்படவேண்டிய அரச நிறுவனங்கள் மற்றும் அறவிடப்பட வேண்டிய பணத்தொகை ஒவ்வொரு நிறுவனத்திற்கிணங்கவும் தனித்தனியாக எவ்வளவு;

(iii) அப்பணத்தொகையை அறவிட கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015.05.30 ஆந் திகதியளவில் கூட்டுத்தாபனத்தினால் கடன், வட்டி மற்றும் வேறு கொடுப்பனவுகளாக செலுத்தவேண்டியிருந்த பணத்தொகை யாது;

(ii) அப்பணத்தொகையைச் செலுத்தவேண்டிய நிறுவனங்கள் மற்றும் செலுத்தவேண்டிய பணத்தொகை ஒவ்வொரு நிறுவனத்திற்கிணங்கவும் தனித்தனியாக எவ்வளவு;

(iii) அப்பணத்தொகைகளைச் செலுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தினால் எண்ணெய் விலையை அதிகரிக்க நேரிடுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த 05 வருடங்களில் கூட்டுத்தாபனம் அடைந்த தேறிய நட்டம் வருடந்தோறும் தனித்தனியாக எவ்வளவு;

(ii) கூட்டுத்தாபனம் நட்டமடைவதில் தாக்கமேற்படுத்திய காரணங்கள் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அக்காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

188/ '15

கௌரவ ஈ. சரவணபவன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 7 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் சேவையாற்றிய பல பாடசாலை அதிபர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) யாழ் குடாநாட்டில் ஒரே பாடசாலையில் 7 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய பாடசாலை அதிபர்கள் அனைவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதா;

(ii) யாழ் குடாநாட்டில் இடமாற்றம் வழங்கப்பட்டிராத பாடசாலை அதிபர்கள் உள்ளனரா;

(iii) ஆமெனில், அவர்களுக்கு இடமாற்றம் கிடைக்காமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

29/ '15

4.

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2 )

(அ) (i) சப்பிரகமுவ மாகாணத்தில், மிகவும் முக்கியமான பௌத்த வழிபாட்டுத் தலமாகிய கூரகல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனிதத் தலத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளல் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கூரகல புனிதத் தலத்திற்கு சொந்தமான காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பரப்பின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அகழ்வுகளின் மூலம் கிடைத்த தொல்பொருட்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கூரகல புனிதத் தலத்தின் பௌத்த உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி அகழ்வுகளை இடையறாமல் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி எப்போதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

184/ '15

5.

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) LTTE அமைப்பின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் தொடர்பாக சட்டத்தினால் தவறாளிகளாக்கப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்ற LTTE அங்கத்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) LTTE அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான குற்றச்செயல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு 2015.10.30 ஆம் திகதி வரை சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கைதிகளின் பெயர்கள், இவர்களுக்கெதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மற்றும் சிறைத் தண்டனைக் காலம் யாவையென்பதையும்;

(ii) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள LTTE சந்தேக நபர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் சிறையிலிடப்பட்ட திகதி யாவையென்பதையும்;

(iii) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள LTTE சந்தேக நபர்களில் இதுவரை குற்றச்சாட்டுக்கள் கோப்பிடப்படாத சந்தேக நபர்கள் இருப்பார்களாயின் இவர்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் கைது செய்யப்பட்ட திகதி யாவையென்பதையும்;

(iv) மேற்படி (ஆ) (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களிடையே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் பயங்கரவாத அல்லது வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ள சந்தேக நபர்கள் இருப்பார்களாயின் இவர்களது பெயர்கள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 11, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

64/ ’15

கௌரவ புத்திக பத்திரன,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் கமநல சேவை ஆளுகைப் பிரதேச மட்டத்தில் வயற் காணிகளை மீட்டல் தொடர்பாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை கமநல சேவை ஆளுகைப் பிரதேசங்களின் படி வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி முறைப்பாடுகளின் பிரதிவாதிகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அந்தஸ்து ஆகியவை யாவை;

(iii) இவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின் இந்நடவடிக்கைகள் , ஒவ்வொரு ஆளின் படி வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சட்டபூர்வமாக அனுமதியைப் பெற்று வயல் காணிகளை மீட்டவர்கள் மாத்தறை மாவட்டத்தில் உள்ளனரா;

(ii) ஆமெனில், இவர்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவை யாவை;

(iii) காணி மீட்புக்கு இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட காரணங்கள் யாவை;

(iv) இவர்கள் ஒவ்வொருவருக்கும் அனுமதி வழங்கிய உத்தியோகத்தர்கள் வெவ்வேறாக யாவர்;

என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) காணி மீட்டல் தொடர்பாக வழக்குத் தொடரப்பட்ட (ஆ) (iv) இல் குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு நீதி மன்றத்தினால் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட தீர்ப்பு வெவ்வேறாக யாவை;

(ii) குறிப்பிட்ட தீர்ப்பின் படி செயற்பட்ட ஆட்கள் யாவர்;

(iii) குறிப்பிட்ட தீர்ப்பின் படி இதுவரை செயற்படாத ஆட்கள் யாவர்;

(iv) தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்த ஆட்கள் யாவர்;

என்பதையும் அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

185/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(ஆ) (i) 2015.10.30 ஆந் திகதியளவில் சிறைச்சாலைகளில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகள் வாரியாகவும்;

(ii) சிறைச்சாலைகளின் மொத்த எண்ணிக்கை சிறைத் தண்டனை அனுபவிக்கும் தவறின் தன்மைக்கமையவும்;

(iii) முதலாவது தடவையாக, இரண்டாவது தடவையாக, மூன்றாவது தடவையாக அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை அந்தந்த தடவைகளுக்கு அமையவும்;

வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) ஒரு சிறைக் கைதிக்காக மாதாந்தம் அரசு ஏற்கும் செலவு எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இந்த சிறைக் கைதிகளுக்கிடையே உள்ள,

(i) ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை;

(ii) 17 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் எண்ணிக்கை;

(iii) 17 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைக்கப்பட்ட இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் எண்ணிக்கை;

(iv) 75 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை;

சிறைச்சாலைகளுக்கு அமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) தாய்மார்கள் சிறையிடப்படுவதன் காரணத்தினால் சிறைச்சாலைகளில் வாழும் பிள்ளைகள் இருப்பின் அந்த எண்ணிக்கை சிறைச்சாலைகளுக்கமையவும் ;

(ii) சிறையிலிடப்பட்டுள்ள மதகுருமார்களின் எண்ணிக்கை மதங்களுக்கமையவும்

வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

68/ '15

கௌரவ புத்திக பத்திறன,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒலுவில் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு செலவுசெய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(ii) இப்பணத்தொகை பெறப்பட்ட மூலங்கள் யாவை;

(iii) மேற்படி மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன் மற்றும் உதவித் தொகைகள் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) குறிப்பிட்ட கடன் மற்றும் உதவிகளுக்கான தவணைப்பணம் மற்றும் வட்டியாக வருடாந்தம் செலுத்தவேண்டிய பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஒலுவில் துறைமுகம் 2013.09.01 ஆம் திகதி மக்களுடைமையாக்கப்பட்ட பின்னர் முதல் வருடத்தில் துறைமுகத்தின் வருமானம் எவ்வளவு;

(ii) இதன் வருமானத் தலைப்புக்கள் யாவை; இந்த ஒவ்வொரு தலைப்பின் படியான வருமானம் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) ஒலுவில் துறைமுகம் மக்களுடைமையாக்கப்பட்ட பின்னர் முதல் வருடத்தில் துறைமுகத்துக்கு செலவுசெய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(iv) இதன் செலவுத் தலைப்புக்கள் யாவை; இந்த ஒவ்வொரு தலைப்பினதும் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி தரவுகளின் படி 2013.09.01 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை ஒலுவில் துறைமுகம் பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு;

(ii) இலாபத்தை அல்லது நட்டத்தை முகாமை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

189/ '15

கௌரவ (டாக்டர் ) நளிந்த ஜயதிஸ்ஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, கொம்பனித்தெருவில் அமைந்துள்ள பாதுகாப்புச் சேவைப் பாடசாலை சார்பில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கல்வி அமைச்சு வருடாந்தம் செலவிட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) இப்பாடசாலை மாணவர்களிடமிருந்து பணம் சேகரிப்பதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதா;

(iii) ஆமெனில், அத்தகைய அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா;

(iv) மாணவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணத்தை வைப்புச்செய்துள்ள வங்கிக்கணக்கு யாது;

(v) இங்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கொன்று பேணப்பட்டு வருகின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2015 திசெம்பர் 12, சனிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

82/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மசகெண்ணெய்யை இறக்குமதி செய்கின்ற நாடுகள் யாவை;

(ii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மேற்படி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்யின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்பட்ட தொகை ஒவ்வொரு நாட்டின்படி தனித்தனியாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அமெரிக்கா ஈரானுக்கு தடை விதிக்க உடன்முந்திய இரண்டு வருடங்களில் இலங்கை ஈரானில் இருந்து பெற்றுக்கொண்ட மசகெண்ணெய் பீப்பாய்களின் எண்ணிக்கை யாது;

(ii) தடைவிதித்த பின்னர் ஈரானில் இருந்து பெற்றுக்கொண்ட எண்ணெய்யின் அளவுக்குச் சமமான எண்ணெய் எந்நாட்டிலிருந்து பெறப்படுகின்றது;

(iii) மூன்றாந் தரப்பினர் ஒருவர் ஊடாக ஈரானிய எண்ணெய் இந்நாட்டுக்கு தருவிக்கப்பட்டதாக கூறப்படுகின்ற குற்றச்சாட்டினை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நாளொன்றுக்கு தேவைப்படுகின்ற மசகெண்ணெய் பீப்பாய்களின் எண்ணிக்கை யாது;

(ii) தட்டுப்பாடின்றி இலங்கைக்கு அவசியமான அளவு எண்ணெய்யை பெற்றுக்கொடுப்பதற்கு வழங்கலாளர்களான நாடுகளுக்கு கடந்த இரண்டு வருடங்களில் இயலுமாயிருந்ததா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

186/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(ஆ) (i) 2015.10.30 ஆந் திகதியளவில் சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகள் வாரியாகவும் ;

(ii) சிறைச்சாலைகளிலுள்ள மொத்த சந்தேக நபர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தவறின் தன்மை வாரியாகவும்;

தனித்தனியாக யாதென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இந்த சந்தேக நபர்களிடையே இருக்கின்ற,

(i) ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை;

(ii) 17 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் எண்ணிக்கை;

(iii) 17 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைக்கப்பட்ட இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் எண்ணிக்கை;

சிறைச்சாலைகள் ரீதியாக தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) மேற்படி (அ) (i) இல் குறிப்பிட்டுள்ள சந்தேக நபர்களிடையே இருக்கின்ற,

(i) பல்வேறு மதங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் மதகுருமாரின் எண்ணிக்கை மதங்களின் படியும்;

(ii) வெளிநாட்டு சந்தேக நபர்களின் எண்ணிக்கை சம்பந்தப்பட்ட நாடுகளின் படியும்;

தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) (i) இந்த சந்தேக நபர்களில் முப்படைகளைச் சேர்ந்த சந்தேக நபர்கள் சிறையிலிடப்பட்ட திகதி மற்றும் அவர்களின் படைப்பிரிவு, கைது செய்யப்பட்டபோது கடமையாற்றிய திணைக்களம் அல்லது படையணி தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) இவர்களிடையே இருக்கின்ற அரச புலனாய்வுச் சேவைகளுக்குரியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

83/ '15

கௌரவ புத்திக பத்திறண,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வசிக்கின்ற தமிழ் பௌத்தர்கள் தொடர்பான தொகை மதிப்பொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் மேற்படி தமிழ் பௌத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) வட மாகாணத்தில் வசிக்கின்ற தமிழ் பௌத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேலே குறிப்பிட்டவாறான தொகை மதிப்பொன்று நடத்தப்பட்டிராவிடின் அத்தகைய ஒன்றினை நடத்துவாரா;

(v) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் தமிழ் பிக்குமார்கள் உள்ளனரா;

(ii) ஆமெனில், அவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்த மக்களுக்கு தமது சமய நடவடிக்கைகளில் ஈடுபடவும் அறநெறிக் கல்வியைப் பெறவும் அவசியமான வசதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது எவ்விதமாக;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

190/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ ,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) கொழும்பு, கொம்பனித்தெருவில் அமைந்துள்ள பாதுகாப்புச் சேவைப் பாடசாலை, பாதுகாப்பு அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படுகின்றதா;

(ii) இப்பாடசாலை அமைந்துள்ள நிலப்பரப்பு எவ்வளவு;

(iii) இக்காணி கல்வி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா ;

(iv) ஆமெனில், யாரினால் கையளிக்கப்பட்டது ; கையளிக்கப்பட்ட திகதி யாது;

(v) இப் பாடசாலையில் இருக்கின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(vi) பாடசாலையில் ஒவ்வொரு தரத்திலும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இப்பாடசாலை சார்பில் பாதுகாப்பு அமைச்சு வருடாந்தம் செலவிட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) ஒரு மாணவரிடம் வருடமொன்றுக்கு அறவிடப்படும் பணத் தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) குறிப்பிட்ட பாடசாலையின் பாடசாலை முகாமைத்துவ சபை உறுப்பினர்களின் பெயர் மற்றும் பாதுகாப்புப் படைகளில் இவர்கள் வகிக்கும் பதவி யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 14, திங்கட்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

84/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2014.06.30 ஆம் திகதி தொடக்கம் 2015.06.30 ஆம் திகதி வரை நடைபெற்ற வாகன விபத்துக்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வாகன விபத்துக்களின் மூலம் சம்பவித்த மரணங்களின் எண்ணிக்கை யாது;

(iii) இம்மரணங்கள் சம்பவித்த விபத்துக்களுக்கான மிக நெருங்கிய காரணம் ஒவ்வொரு விபத்தின்படி வெவ்வேறாக யாது;

(iv) இதன்படி அதிகப்படியான மரணங்கள் சம்பவித்ததற்கான காரணம் யாது, அதன் பெறுமானம் சதவீதமாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் வாகன விபத்துக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அதற்கான திட்டங்கள் யாவை;

(iii) இத்திட்டங்களில் செயற்படுத்தப்பட்ட மற்றும் செயற்படுத்தப்படாத திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

187/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று காலை அலரி மாளிகை வளாகத்தில் அரச விரோத சூழ்ச்சியொன்று இடம்பெற்றதாக தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த அரசியல்வாதிகள் தெரிவித்திருந்தார்கள் என்பதையும்;

(ii) அவ்வாறானதொரு சூழ்ச்சி இடம்பெற்றதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் அரசாங்கத்தின் ஊடக பேச்சாளரான அமைச்சர், அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போதும் பாராளுமன்ற சபா மண்டபத்திலும் தெரிவித்திருந்தார்கள் என்பதையும்;

(iii) மேற்படி சூழ்ச்சி தொடர்பாக கண்டறிவதற்கு இலங்கைப் பொலீசாரினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதென்பதையும்;

(iv) ஏற்புடைய விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களுக்கமைய முன்னாள் சனாதிபதி அல்லது முன்னாள் பாதுகாப்பு செயலாளர் சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று எவ்விதமான அரச விரோத சூழ்ச்சியையும் மேற்கொள்ளவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்ட பொலிஸ் விசாரணையின் பெறுபேறு யாதென்பதையும்;

(ii) மேற்படி விசாரணைக்கமைய குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு பொலிசாரினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iv) மேற்படி விசாரணைக்கமைய, 2015 சனவரி 09 ஆம் திகதியன்று காலை அலரி மாளிகையில் எவ்விதமான அரச விரோத சூழ்ச்சியும் நடைபெறவில்லை என அறிவிப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

85/ '15

கௌரவ புத்திக பத்திறன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கொழும்பு லும்பிணி வித்தியாலயத்தின் லும்பிணி அரங்கு பழுதடைந்து உள்ளது என்பதையும்;

(ii) அதைத் திருத்தியமைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) மேற்படி அரங்கு பழுதடைந்து காணப்படுவது குறித்த பாடசாலைக்கும் அதேபோன்று கலைத்துறைக்கும் பாரிய இழப்பாக அமைந்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) லும்பிணி அரங்கு திறந்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அன்று தொடக்கம் இன்று வரை அது எத்தனை தடவைகள் மறுசீரமைக்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி அரங்கு இறுதியாக மறுசீரமைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) லும்பிணி அரங்கினை மறுசீரமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென செலவிடும் தொகை யாதென்பதையும்;

(iii) குறித்த மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

191/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 – 2014 வரை இ.போ.ச வினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள புதிய பஸ்வண்டிகளின் எண்ணிக்கை வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) பஸ்வண்டிகளை கொள்வனவு செய்வதற்காக வருடாந்தம் செலவிடப்பட்ட பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புதிய பஸ்வண்டிகள் வழங்கப்பட்ட டிப்போக்கள் யாவையென்பதையும்;

(iv) லங்கா அசோக் லேலண்ட் கம்பனியிலிருந்து WP NB-6028, WP NC-6049, WP NB-6051, WP NB-6057, WP NB-6067, WP NB-6671, WP NB-7750, WP NB-7751, WP NB-7752, WP NB-7967, WP NC-0653, WP NC-1307, WP NC-1746 மற்றும் WP NC-2016 ஆகிய இலக்கங்களுடைய 14 பஸ்வண்டிகளை கொள்வனவு செய்ய செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள 14 பஸ்வண்டிகளும் தற்போது இ.போ.ச. வசம் உள்ளனவா என்பயையும்;

(ii) ஆமெனில், மேற்படி பஸ்வண்டிகள் உரித்தாயுள்ள டிப்போக்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2015 திசெம்பர் 15, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

122/ '15

கௌரவ புத்திக பத்திரண,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.07.31 ஆம் திகதி வரை சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பிடியிலிருந்து தப்பியோடியுள்ள சிறைக்கைதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) இச்சிறைக்கைதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த தண்டனைகள் மற்றும் இவர்கள் ஈடுபட்ட குற்றச்செயல்கள் ஒவ்வொரு ஆள் தொடர்பாகவும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி சிறைக்கைதிகளில் தற்போது கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது பிடிபடாமல் சுதந்திரமாக உலாவும் சிறைக்கைதிகளை கைதுசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

192/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) ஹோமாகம, தியகம, மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்திற்குரிய நிலப்பகுதியின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பகுதி சொந்தமாக இருந்த அரசாங்க நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிலப்பகுதி, விளையாட்டுத்துறை அமைச்சினால் அல்லது வேறு அரச நிறுவனத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கு ஏற்புடைய ஆவணங்களை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) தற்போது விளையாட்டு மைதானத்தின் நிர்வாகம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்பவர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(ii) அரசாங்கம் செலவிட்டுள்ள பணத்தொகை மற்றும் தனியார் நன்கொடைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) இதற்கு நிதி ஒதுக்கீடு செய்த அமைச்சுகள் யாவையென்பதையும்;

(iv) நிர்மாணிப்புகளுக்காக பணம் வழங்கியுள்ள தனியார் நன்கொடையாளர் களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) விளையாட்டு மைதானத்தை விளையாட்டுப் பணிகளுக்காக வழங்குதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் இற்றைவரை அறவிடப்பட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு வருடத்திற்கும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி பணம் வரவு வைக்கப்பட்டுள்ள கணக்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்துடன் சம்பந்தப்பட்ட "விளையாட்டு அபிவிருத்தி மன்றமொன்று" உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் எந்த அமைச்சரால், எந்தத் திகதியில் பெறப்பட்டதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

143/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் முதியோர் குடிசனத்தொகை அதிகரித்து வருகின்றதென்பதையும்;

(ii) எதிர்காலத்தில் இந்த நிலைமை சமூகத்துக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் 70 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சனத்தொகை பெண்கள் மற்றும் ஆண்கள் என்ற ரீதியில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) முதியோர் சனத்தொகை மொத்த குடிசனத்தொகையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி சனத்தொகையில் ஓய்வூதியம் பெறும் ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஓய்வூதியம் பெறாதவர்களின் நலன்புரிக்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) அதிகரித்து வரும் முதியோர் சனத்தொகையின் வாழ்க்கைத் தரத்தை முகாமை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

193/ '15

கௌரவ ஜயந்த சமரவீர,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரகீத் எக்னெலிகொட காணாமற் போதல் பற்றிய சம்பவம் தொடர்பாக இராணுவ புலனாய்வுப் பிரிவில் பணியாற்றுகின்ற மற்றும் ஓய்வுபெற்ற 11 உத்தியோகத்தர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்கள் என்பதையும்;

(ii) இதனுடன் தொடர்புடையதாக ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தின் கட்டளைக்கேற்ப கிரித்தலை இராணுவ முகாமில் இருந்த இரகசிய ஆவணங்கள், புகைப்படங்கள் மற்றும் அறிக்கைகள் இரகசிய பொலிசாரினால் விசாரணைக்கென மேற்படி இராணுவ முகாமிலிருந்து அகற்றப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இந்த நடவடிக்கையின் காரணமாக புலானாய்வுப் பிரிவுக்கு சொந்தமான, தேசிய பாதுகாப்புக்கு மிகவும் முக்கியமான தகவல்கள் வெளிப்படுவதற்கான ஆபத்து உள்ளதென்பதையும்;

(iv) இதன் காரணமாக புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் மனம் தளர்வடைவதற்கும் ஊக்கம் குன்றுவதற்கும் ஆளாவதன் மூலம் புலானய்வு நடவடிக்கைகள் பாதிப்படைவதன் ஊடாக நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பாதகமான தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதென்பதையும்;

(v) இந்நடவடிக்கையின் காரணமாக புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களின் ஆளடையாளம் வெளிப்படுவதால் 2002 மிலேனியம் சிட்டி சம்பத்தின் போது நடந்ததைப் போன்று இவ்வுத்தியோகத்தர்களின் உயிருக்கு கடும் ஆபத்து நிலை ஏற்படும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) (அ) (i) இல் குறிப்பிடப்படுள்ள புலனாய்வுப் பிரிவு உத்தியோகதத்தர்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் யாதென்பதையும், இவர்களுக்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர் யாரென்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கையின் காரணமாக புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் களுக்கு ஏற்படக்கூடிய உயிராபத்தைத் தடுத்து இவர்களை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2015 திசெம்பர் 16, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

144/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2013.01.01 ஆம் திகதியிலிருந்து 2014.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வனசீவராசிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் தொடர்பாக குற்றவாளிகளாக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் சேவை நிலையங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களால் இழைக்கப்பட்ட குற்றங்கள் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குஅறிவிப்பாரா?

(ஆ) (i) அரச உத்தியோகத்தர்களால் வனசீவராசிகளுக்கு ஏற்படுத்தப்படுகின்ற சேதங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

145/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ பிரதேசத்தில் ஹுலங்தாவ பெருந்தோட்டத்தை அண்மித்து வசிக்கின்ற மக்களுக்கு குறைந்தபட்ச அடிப்படை வசதிகளேனும் இல்லை என்பதையும்;

(ii) இதன் காரணமாக இந்த மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்கின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஹுலங்தாவ பெருந்தோட்டத்தில் நீர், வீதி, வீடு மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறு; எத்திகதியிலிருந்து என்பதையும்;

(iii) இதற்கென செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் பணத்தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2015 திசெம்பர் 17, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

146/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுற்றுலா வீசாவில் இலங்கைக்கு வருகைதந்து, சட்டவிரோதமான விதத்தில் இந்நாட்டில் தங்கியிருந்து பல்வேறு மதங்களை பரப்பும் பணிகள், பல்வேறு தொழில்கள் மற்றும் வர்த்தகங்களில் ஈடுபடுதல் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ளமை காரணமாக 2015 ஆம் ஆண்டினுள் கைது செய்யப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்கள் உரித்தாகின்ற நாடுகள் யாவை;

(iii) இவர்கள் புரிந்த சட்ட விரோத செயல் மற்றும் வழங்கப்பட்ட தண்டனை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுற்றுலா வீசாவில் வருகைதந்து சட்டவிரோதமான விதத்தில் இந்நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களை கைது செய்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா;

(ii) இவர்கள் தொடர்பில் வலுவிலுள்ள சட்ட ஒழுங்குவிதிகளை மேலும் கடுமையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

147/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) போகம்பர சிறைச்சாலையிலிருந்து சிறைக்கைதிகள் அகற்றப்பட்ட பின்னர் அதனை துப்புரவு செய்வதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகை பெறப்பட்ட மூலம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) போகம்பர சிறைச்சாலை தற்போது எந்த நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படுகின்றதென்பதையும்;

(ii) இதன் உரிமை தனியார் நிறுவனமொன்றுக்கு அல்லது தனி ஆளொருவருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், இந்நிறுவனத்தின் அல்லது ஆளின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2015 திசெம்பர் 18, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

155/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) சேனைப் பயிர்ச் செய்கை, விலங்குகளை வேட்டையாடுதல் மற்றும் பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் காரணமாக வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு உரித்தான வனங்களுக்கு சேதம் ஏற்படுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி சேதத்தை உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் தலையீட்டின் காரணமாகத் தடுக்க முடியாதுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி வனங்களுக்கான சேதமானது ஒட்டுமொத்த இலங்கையிலும் காலநிலை, பொருளாதார மற்றும் சமூக ரீதியான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கடந்த இரண்டு வருட காலப்பகுதிக்குள் இந்த வனங்களில் வேட்டையாடுதல் மற்றும் சேனைப் பயிர்ச் செய்கை தொடர்பாக சட்டத்தின் முன் தவறாளிகளாக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) வன ஒதுக்கங்களினுள் வேட்டையாடுதல் மற்றும் சேனைப் பயிர்ச் செய்கையை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வன ஒதுக்கங்களின் பாதுகாப்புக்காக தற்போது காணப்படுகின்ற மனித மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பாக திருப்தியடைகின்றீரா என்பதையும்;

(ii) இன்றேல், வன ஒதுக்கங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 19, சனிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

32/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் பல கிராமிய வீதிகள் சீரழிந்த நிலையில் உள்ளனவென்பதையும்;

(ii) இதனால் அம்மக்கள் பெருஞ்சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனரென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டில் மாத்தறை மாவட்டத்தின் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(ii) அப் பணத்தொகையைக் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு வீதிக்கும் செலவிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மாத்தறை மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படாத வீதிகள் பற்றிய மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் அவ்வீதிகள் யாவை;

(iii) அவ்வீதிகள் இறுதியாக புனரமைக்கப்பட்டுள்ள திகதி தனித்தனியாக யாது?

(iv) அவ்வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா;

(v) ஆமெனில் அத்திட்டங்களை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

40/ '15

கௌரவ புத்திக்க பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (I) கலேவெல பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய கெதினாகல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொரு புனிதத்தலம் என்பதையும்;

(II) இந்த புனிதத்தலத்தில் கல்லுடைப்பதற்காக இதற்கு முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் இடமளிக்கப்பட்டிருந்ததென்பதையும்;

(III) இதன்போது பிரதேச மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (I) மேற்படி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் கல்லுடைப்பதற்காக மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா;

(II) இவ்வாறு கல்லுடைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டது யாருக்கு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (I) கெதினாகல தொல்பொருளியல் பிரதேசத்தை பேணிப்பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(II) ஆமெனில், அது எவ்வாறு;

என்தை அவர் குறிப்படுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2016 சனவரி 08, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.129/ ’15

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் பிக்குணீகள் சாசனத்தை இடையறாமல் பேணிவருவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— மஹா பிரஜாபதி கோதமி பிக்குணீயுடன் தொடங்கிய பாரத பிக்குணீகள் சாசனம் சங்கமித்தா பிக்குணீயின் இலங்கை வருகை மூலமாக இலங்கையில் நன்கு தாபிக்கப்பட்டபோதிலும், பிற்காலத்தில் மறைவடைந்தமையால், அண்மைக்காலத்தில் சியாமோபாலீ மஹா நிக்காயவின் ரங்கிரி தம்புலு தரப்பினரால் மீளவும் தாபிக்கப்பட்டதோடு, அவ்விதமாக தாபிக்கப்பட்ட பிக்குணீகள் சாசனத்திற்கு முறைசார்ந்த அங்கீகாரத்தை வழங்குவதற்காக அரசாங்கம் மூன்று பீடங்களையும் சேர்ந்த மகாநாயக்க தேரர்களை உள்ளிட்ட ஏற்புடைய அனைத்து துறைகளினதும் தலைமையில் சரியான உரையாடலை ஆரம்பிக்க வேண்டுமெனவும், அவ்வுரையாடலின் இறுதியில் முறைசார்ந்த வழிமுறையொன்றின் ஊடாக இலங்கையில் பிக்குணீகள் சாசனத்தை இடையறாமல் பேணிவருவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.130/ ’15

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கை பிக்குமார் கூட்டமைப்பினை கட்டமைப்புரீதியாக ஒழுங்கமைத்தல்,— இலங்கை பிக்குமார் கூட்டமைப்பில் பிக்குமார்கள் தரப்பிரனர்களாக பிரிந்துள்மையால் கட்டமைப்பு ரீதியாக ஒழுங்கமையாதுள்ளதோடு, அதன் காரணமாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சடங்குமுறைகளில் பிக்குமார்கள் ஏகோபித்த நிலையில் இல்லாமை நாட்டுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதால் ஒட்டுமொத்த பிக்குமார் சமூகத்திலும் ஏகோபித்தநிலையினை ஏற்படுத்தக்கூடிய வேலைத்திட்டமொன்றினை தயாரிக்க அரசாங்கம் தலையீடு செய்யவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.131/’15

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுதல்,— இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மக்கள் நேயமிக்கதான முறையில் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான திட்டங்களை தயாரிப்பதற்காக கல்விமான்கள் சபையொன்றை நியமிப்பதற்கும் அவர்களுடைய பரிந்துரைகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தில் நிலவும் ஊழல், மோசடி மற்றும் நிருவாகப் பிரச்சினைகளை தீர்த்து பயனுறுதியான ஒரு தேசிய நிறுவனமாக இயங்குவதற்குத் தேவையான சூழலை அரசாங்கம் தலையீடுசெய்து உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.132/’15

கௌரவ புத்திக பத்திரண,— மருந்தாக்கலுக்கு தேவையான அளவு கஞ்சாவை பயிரிடுவதற்கு சுதேச மருத்துவர்களுக்கு அனுமதி அளித்தல்,— இந்தியாவிலிருந்து இரகசியமான வழிகளின் ஊடாக நாட்டினுள் கொண்டுவரப்படுகின்ற இராசயனப் பொருட்கள் கலந்த கஞ்சாவை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற சுதேச மருந்துகளின் தரம் குறைவடைவதால், ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்கின்றபோது, தமது மருந்துகளின் தரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக, கஞ்சாவை அத்தியாவசிய ஔடதமாக பயன்படுத்தும் அரச அங்கீகாரம் பெற்ற ஆயுர்வேத மருத்துவர்களுக்கு கட்டுப்பாடுகளுடன் கஞ்சா தாவரத்தை பயிரிடுவதற்கு அனுமதி அளிப்பதற்குத் தேவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.133/'15

கௌரவ புத்திக பத்திறண,— மரக்கறிச் செய்கையாளர்களுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுத்தல்,— மரக்கறி மொத்த வியாபாரத்தில் நிகழும் கப்பம் பெறுதல் மற்றும் விலையை தீர்மானித்தல் முதலிய செயற்பாடுகளின் ஊடாக கட்டியெழுப்பப்பட்டுள்ள ஒழுங்கமையப் பெற்ற வர்த்தக தனியுரிமையினால் மரக்கறிச் செய்கையாளர்களுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுப்பதற்காக இற்றைவரை அமுலாக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் தோல்வியடைந்திருப்பதால், விவாசாயிகளுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்ட, அழுத்தங்களற்ற சந்தையொன்றினை அரசாங்கத்துறை வர்த்தக நிறுவனங்கள் தலையீடு செய்து உருவாக்கிச் செயற்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.134/'15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் முக்கியத்துவத்தை சமூகமயமாக்கல்,— பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பாடசாலை வான் சாரதிகளுக்கு பிள்ளைகளின் முக்கியத்துவம் பற்றி சமூகவியல் மற்றும் உளவியல் முறையியல்களைக் கொண்டு எளிதாக விளக்கி, நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக பிள்ளைகளை சமூக சவால்களிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பதைப் பற்றிய கலந்துரையாடலொன்றை நடத்துவதற்காக தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.135/'15

கௌரவ புத்திக பத்திறண,— பெண்களுக்கான ஒடுக்குமுறைகளைக் குறைத்தல்,— இன்றைய உலகளாவிய சமூகத்தில் பெண்களுக்கு நேரிடுகின்ற தொல்லைகளான தொழில் மற்றும் பாலியல் சுரண்டலுக்கு ஆளாதல், தனியார் சொத்துரிமை முறை ஆண்களை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளமை, சமமாகக் கருதப்படாமை மற்றும் குடும்ப அமைப்பினுள் சிறைப்பட்டுள்ளமையின் காரணமாக தொழில்பெயர்ச்சிக்கு தடைஏற்படுதல் ஆகிய விடயங்கள் இலங்கைப் பெண்களுக்குப் பொதுவானவையாக உள்ளதால், அவர்களின் நல்லிருப்புக்காக இந்த அசௌகரியமான சூழலை சீராக்கி நிவாரணம் வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.136/'15

கௌரவ புத்திக பத்திறண,— தொல்பொருளியல் திணைக்களத்தை மேம்படுத்தல்,— இலங்கையினுள் அமையப்பெற்றுள்ள தொல்பொருள்களை பேணிக்காப்பதற்கான ஆற்றல் தொல்பொருளியல் திணைக்களத்திடம் இல்லாமைக்கான காரணம் தற்போது நிலவுகின்ற மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறையாகும் என்பதால், கல்விமான்கள் குழுவொன்றின் மூலம் தொல்பொருளியல் திணைக்களத்திலுள்ள குறைபாடுகள் பற்றி ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம்தீர்மானிக்கின்றது.

பா.137/'15

கௌரவ புத்திக பத்திறண,— தூரப் பயணச் சேவை பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் ஆரோக்கியமான உணவு, குடிபானங்களை பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்தல்,— தூரப் பயணச் சேவை பேருந்துகள் உணவு, குடிபானங்களை பெற்றுக்கொள்வதற்கு நிறுத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகளின் தரம் மிகக் கீழ் மட்டத்தில் உள்ளதால் பயணிகளின் ஆரோக்கியத்திற்கு பாதகமானதாயுள்ளதோடு, மேற்படி சிற்றுண்டிச் சாலைகளின் தரத்தை உயர்த்துவதற்காக எப்போதும் பின்னாய்வு செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.138/'15

கௌரவ புத்திக்க பத்திறண,— அரசாங்கத்திற்கு சொந்தமான பெருந்தோட்ட கம்பனிகளை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுதல்,— அரசாங்கத்திற்கு சொந்தமான பெருந்தோட்ட கம்பனிகள் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களாக மாறியுள்ளதால், கல்விமான்கள் குழுவொன்றை நியமித்து மேற்படி நிறுவனங்களின் இலாபகரத்தன்மையை உயர்த்துவதற்குத் தேவையான விதப்புரைகளை தயாரித்து, அவ்விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக மேற்படி கம்பனிகளின் இலாபகரத்தன்மையை உயர்த்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.139/'15

கௌரவ புத்திக பத்திறண,— பாதுகாக்கப்பட்ட வனங்களினுள் இடம்பெறுகின்ற சட்டவிரோதச் செயல்களை நிறுத்தல்,— இலங்கையின் பாதுகாக்கப்பட்ட வனங்களினுள் இடம்பெறுகின்ற சட்டவிரோத பயிர்ச்செய்கை, பல்வேறு நிர்மாணிப்புக்கள், காடுகளை வெட்டித்துப்புரவாக்கல் மற்றும் பாதுகாப்பு வன எல்லைகளை மாற்றியமைத்தல் ஆகியன அழிவுக்கு காரணமாக அமைகின்ற மனித செயற்பாடுகளின் சுற்றிவளைப்புக்கு விசேடமாக வலுவூட்டப்பட்ட பொலிஸ் வனப்பாதுகாப்புப் பிரிவொன்றை தாபிக்க அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.140/'15

கௌரவ புத்திக பத்திறண,— பவளப் பாறைகளை பேணிப்பாதுகாத்தல்,— கடல்நீரின் வெப்பநிலை அதிகரித்தல் மற்றும் மனிதசெயற்பாடுகள் காரணமாக பவளப்பாறைகள்அழிவடையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதால் இலங்கைக் கடல் வலயத்தைச் சூழவுள்ள பவளப்பாறைகளைப் பாதுகாப்பதற்கும், புதிய பவளப்பாறைகள் உருவாவதற்குப் பொருத்தமான சூழல் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் தேவையான புதிய ஒழுங்குமுறைப்படுத்தல்களை தயார்செய்து அமுல்படுத்துவற்கு அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.141/ '15

கௌரவ அப்துல்லா மஹரூப்,— திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்களை வேறு இடத்திற்கு மாற்றுதல்,— திருகோணமலை கடற்படை முகாம் வடக்கு மற்றும் கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் உள்ள பிரதான இராணுவத் தளமாக இருந்த போதிலும், யுத்த முடிவின் பின் புல்மோட்டை தொடக்கம் லங்காபட்டணம் வரை பல சிறிய கடற்படை மற்றும் இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டுள்ளதோடு அந்த முகாம்கள் தொழில்முயற்சியாண்மை, மீனவர்கள் மற்றும் பொதுமக்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு தடையாக அமைவதனால், மக்களின் சுபீட்சகரமான வாழ்விற்கு உதவும்முகமாக அந்த இராணுவ முகாம்களை வேறு இடத்திற்கு மாற்றுதல் வேண்டுமென இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.142/ '15

கௌரவ அப்துல்லா மஹரூப்,— ஒலுவில், பாலமுனை துறைமுக நிர்மாணங்களை பூரணப்படுத்தல்,— இந்த மீன்பிடித்துறைமுகம் இப்பிரதேச மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதாலும், 400 மீற்றர் வரை உள்ள குடியிருப்புக் காணிகள் கடல் அரிப்பிற்கு உள்ளாவதாலும், இப்பிரதேசத்திலுள்ள வடிகால் முறைகள் அடைபடுவதாலும், இந்நிலைமையின் விளைவாக சுமார் 10 கிராமங்கள் டெங்கு போன்ற பயங்கரமான நோய்களின் தாக்கத்துக்கு உள்ளாவதாலும் கடல் அரிப்பின் காரணமாக கலங்கரை விளக்கு, துறைமுக விருந்தினர் இல்லம் ஆகியன பாதிப்படையக்கூடிய நிலையிலுள்ளதாலும், ஒலுவில், பாலமுனைத் துறைமுக அலைதாங்கி நிர்மாணப் பணிகள் பூரணப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.143/ '15

கௌரவ அப்துல்லா மஹரூப்,— கால்நடைகளுக்கு உகந்த மேய்ச்சல் நிலம் ஒதுக்குதல்,— திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 250,000 கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் தேவைப்படுவதாலும் மேய்ச்சலுக்கென ஒதுக்கப்பட்ட நிலம் இம்மாவட்டத்தில் காணப்படாமையால் பால் உற்பத்தியை மேம்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கை பாதிப்புக்கு உள்ளாவதாலும் திருகோணமலை மாவட்டத்தில் உகந்ததொரு மேய்ச்சல் நிலம் அறிவிக்கப்பட்டு ஒதுக்கப்படுவதுடன் வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.144/'15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சமயப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற துர்நடத்தை மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமான ஒரு நீண்டகாலத் தீர்வாக பாடசாலை மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமை காலையில் அறநெறிப் பாடசாலை, அஹதியா (சமய) பாடசாலை செல்வதைக் கட்டாயப்படுத்தல் உகந்ததாகுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.145/'15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அரச நிறுவனங்களினால் பொதுமக்களுக்கு ஏற்படும் துர்செயல்கள் பற்றி ஆராய்வதற்கான ஒரு நிறுவனத்தை தாபித்தல்,— பல்வேறுபட்ட சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரச நிறுவனங்களுக்கு வருகைதரும் பொதுமக்களுக்கு ஏற்படும் முறையற்ற செயல்கள் மற்றும் அநீதிகளை ஆராய்வதற்காகவும், குறித்த அநீதிகளை விசாரிப்பதற்காகவும் சட்டத் தத்துவத்துடன் கூடிய நிறுவனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.146/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— நாட்டினுள் காணப்படுகின்ற போர்க்கால சிதைவுகளை புனரமைத்து மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தல்,— நாட்டில் நிலவிய யுத்த நிலவரம் காரணமாகவும் இராணுவ நடவடிக்கைகளினாலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் சகல பிரதேசங்களிலும் அழிவடைந்த நிலையிலுள்ள கட்டிடங்கள், நீர்த்தாங்கிகள், புகையிரதங்கள், பஸ் வண்டிகள், விமானங்கள் என்பவற்றை காட்சி நிலையங்களாகவும் பாதுகாப்பு இடங்களாகவும் அரச செலவில் தொடர்ச்சியாகப் பராமரித்துப் பேணி வருதல் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தடையாக இருப்பதனால், நாட்டின் இன்றைய இளைஞர் சந்ததியினர் மற்றும் எதிர்கால சந்ததியினர் மத்தியில் நாட்டில் ஏற்பட்ட போர்க்கால அழிவுகள் தொடர்பான நினைவுகளை இல்லாமல் செய்யும் நோக்கத்துடன் இவ்வாறு அழிவுற்ற இடங்களையும் ஏனைய உடைமைகளையும் மீண்டும் புனரமைத்து மக்களின் நலன்கருதி அவற்றை பாவிப்பதற்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 147/15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— யுத்தத்தின்போது உயிரிழந்த மக்களை நினைவுகூர்வதற்காக நினைவுத்தூபியொன்றை அமைத்தல் மற்றும் நினைவுகூர்வதற்கான பொதுத் திகதியொன்றைக் குறித்தொதுக்குதல்,— வட மாகாணத்தில் கடந்த பல தசாப்தங்களாக காணப்பட்ட யுத்த நிலவரம் நீங்கி அமைதியானதொரு வாழ்க்கை முறையில் மக்கள் பிரவேசித்துள்ளதோடு, கடந்த காலப்பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலைமையின் காரணமாகவும், யுத்த நிலவரம் காரணமாகவும், படுகொலைக்கு உள்ளான அனைத்து இன, மத மற்றும் சமூகங்களைச் சேர்ந்த, சகல மொழிகளையும் பேசுகின்ற மக்களை இலங்கையர்களாக நினைவுகூர்ந்து, அம்மக்கள் தாய் நாட்டுக்காக மேற்கொண்ட தியாகங்களுக்கு மதிப்பளிப்பதற்காக, வட மாகாணத்தின் ஓமந்தைப் பிரதேசத்தில் பொருத்தமானதோர் இடத்தில் "நினைவுத்தூபியொன்றை"அமைப்பதற்கும், மேற்படி யுத்த நிலவரம் காரணமாக உயிரிழந்த சகல இன, மத மற்றும் மொழிகளைப் பேசுகின்ற மக்களை நினைவுகூர்வதற்காக பொருத்தமான திகதியொன்றை பெயரிட்டு ஒவ்வோர் ஆண்டும் அத்தினத்தைக் கொண்டாடுவதற்கும்அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீமானிக்கின்றது.

பா.148/'15

கௌரவ பிரசன்ன ரணவீர,— அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் கணிப்பிடப்படும் 40% கழிப்பனவு எல்லையை கொடுப்பனவுகளுடன் கூடிய மொத்தச் சம்பளத்திலிருந்து கணிப்பிடல்,— அரச நிதி ஒழுங்குவிதிக் கோவைக்கமைய கடன் பெறும்போது 40% கழிப்பனவு எல்லை அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுவதால், அரச ஊழியர்களுக்கு அவசர தேவையொன்றின்போது அல்லது வீட்டுத் திருத்தவேலைக்கு அரசாங்க வங்கியொன்றிலிருந்து அல்லது அரச துணை நிறுவனமொன்றிலிருந்து கடன் தொகையொன்றை பெறுவதற்கு மேற்படி காலங்கடந்த சட்டம் இடையூறாக இருக்கின்ற போதிலும், ஏழாண்டு ஆதனக் கடனை பெறுகையில் ஐந்தாண்டு கால நிரந்தர ஓய்வூதியத்துடன் கூடிய சேவைக்காலம் கருத்திற் கொள்ளப்படுவதால், மேற்படி கழிப்பனவு எல்லை ஏற்புடையதாகாதென்ற போதிலும், அரச சேவைக்கு புதிதாக இணைகின்ற அரச ஊழியரொருவருக்கு மேற்படி கழிப்பனவு எல்லை காரணமாக கடன் தொகையொன்றைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருப்பதால் 40% கழிப்பனவு எல்லை கொடுப்பனவுகளுடன் கூடிய மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.149/'15

கௌரவ ஹேசா விதானகே,— ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பாக உரிய தரத்தை ஏற்படுத்துதல்,— இலங்கையில் பேணிவரப்படுகின்ற ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் பெரும்பாலானவை தகைமையுடைய நிருவாகிகள் இல்லாமை, பொருத்தமற்ற இடங்களில் பேணிவரப்படுகின்றமை, பிள்ளைகளுக்கு பொருத்தமற்ற பாடவிடயப் பரப்புகள் கற்பிக்கப்படுதல் மற்றும் உரிய தரத்தை கொண்டிராத அதேவேளை, அவற்றை மேம்படுத்தும் பொருட்டு மாகாண சபைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளும் திருப்திகரமாக இல்லாததால், எதிர்கால சிறுவர் சந்ததியினருக்கு பெரும் பணியாற்றுவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக தேசிய வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.150/'15

கௌரவ ஹேஷா விதானகே,— பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கான ஒழுங்கான முறையியலொன்றை தயாரித்தல்,— இலங்கையில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகின்றபோது இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த கட்சி, நிற பாகுபாட்டு முறையை புறக்கணித்துவிட்டு, நியாயத்தை நிலைநாட்டுவதற்காகன ஒழுங்கான முறையியலொன்றை திட்டமிட்டு, அதனை ஒரு கொள்கையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அரசியல்வாதிகளின் முன்னிலையில் பட்டதாரிகள் இழிவாக நடத்தப்படாத வகையில் செயலாற்றுதல் வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.151/'15

கௌரவ ஹேஷா விதானகே,— தோட்டங்களைச் சார்ந்து வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்,— தோட்டங்களைச் சார்ந்து தமிழ் மக்கள் வாழும் சுற்றுச்சூழலில் மின்சாரம், நீர் வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன், இந்நிலைமையானது பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும், இம்மக்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதால், இந்த லயன் வீட்டுக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, இதற்குப் பதிலாக புதிய முறைசார்ந்த தனி வீட்டுத் திட்டமொன்றை தயாரிப்பதற்குத் தேவையான துரித வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.153/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— அரசியல் காரணங்களின் அடிப்படையில் வாழ்வின் எழுச்சி பயன்கள் இழக்கச் செய்யப்பட்டுள்ளவர்களுக்கு துரித நிவாரணம் வழங்கல்,— நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டுள்ள வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாழ்வின் எழுச்சி கொடுப்பனவுகள் கிடைக்க வேண்டிய பெரும் எண்ணிக்கையான வறியவர்கள் அரசியல் காரணங்களின் அடிப்படையில் மேற்படி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்களை இழந்துள்ளதன் காரணமாக, எந்தவொரு பேதமுமின்றி மேற்படி கொடுப்பனவுகள் கிடைக்க வேண்டிய வறியவர்கள் அனைவருக்கும் துரிதமாக பெற்றுக்கொடுக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.154/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டி மாவட்டத்தில் தொடர்மாடி வீடமைப்புத் திட்டமொன்றை ஆரம்பித்தல்,— கண்டி மாவட்டத்தில் நிலவுகின்ற காணி மற்றும் வீட்டுப் பற்றாக்குறைக்குத் தீர்வொன்றாக கண்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரசாங்க பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு உரித்தான பயிர்ச்செய்கை செய்யப்படாதுள்ள காணிகளைத் தேர்ந்தெடுத்து, தொடர்மாடி வீடமைப்புத் திட்டமொன்றை உருவாக்கி வீடுகள் இல்லாத கண்டி மாவட்ட நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு துரிதமாக வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.155/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— 12 ஆண்டுகள் இராணுவ கடமைகளில் ஈடுபட்டிருந்த முப்படைவீரர்களுக்கு ஓய்வூதியம் பெற்றுக்கொடுத்தல்,— இலங்கை முப்படைச் சேவையில் 22 ஆண்டுகள் பூர்த்தியடைந்த பின்னர் ஓய்வு பெறக்கூடிய வழிமுறையொன்று நடைமுறையில் உள்ளதால், வடக்கு கிழக்கில் இராணுவ நடைவடிக்கைக் கடமையில் 12 ஆண்டு காலம் தொடர்ச்சியாக சேவையாற்றிவிட்டு இச்சேவைகளிலிருந்து நீங்கியுள்ளவர்கள் தற்சமயம் மிக நிர்க்கதி நிலையில் உள்ளதால் மேற்படி முப்படை மற்றும் பொலிஸ் சேவையில் கடமையாற்றியவர்களுக்கு பகுதியளவு ஓய்வூதியமொன்றை பெற்றுக்கொடுக்கும் வழிமுறையொன்றை விரைவில் தயாரித்து இவர்களுக்கு நிவாரணம் வழங்குவது உசிதமாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.156/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டி நகரில் காணப்படும் வாகன நெரிசலை குறைத்தல்,— இலங்கையின் இரண்டாவது தலைநகரான கண்டி நகர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களின் சுற்றுலா நிலையமாக காணப்படுவதாலும், கண்டி நகருக்கு அன்றாடம் பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை தருவதுடன் இம்மக்கள் கண்டி நகரிலும் அண்மித்த வீதிகளிலும் உள்ள அதிக வாகன நெரிசல் காரணமாக பெரும் சிரமத்திற்கு உள்ளாவதாலும், கண்டி நகரில் வாகன நெரிசலை குறைப்பதற்காக துரித தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.157/'15

கௌரவ லக்கி ஜயவர்த்தன,— கண்டி நகரத்தில் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையொன்றை ஆரம்பித்தல்,— கண்டி மாவட்டத்தில் பெருமளவிலான முஸ்லிம் மக்கள் வாழ்வதுடன், கண்டி நகரை அண்மித்தாக முஸ்லிம் ஆண்கள் பாடசாலையொன்றை அமைக்க வேண்டுமென்பது இப்பிரதேச மக்களினது நீண்ட கால கோரிக்கையாகவும் அமைந்துள்ளமையால், மிக விரைவில் கண்டி நகரத்தில் முஸ்லிம் ஆண்கள் கல்லூரியொன்றை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.158/'15

கௌரவ லக்கி ஜயவர்த்தன,— கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பிரபல்யமிக்க பாடசாலைகளின் முதலாம் தரத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக புதிய கட்டடங்களை நிர்மாணித்தல்,— கண்டி நகருக்கு அண்மையிலுள்ள பிரபல்யமிக்க பாடசாலைகளின் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு பெரும் தொகையானோர் விண்ணப்பித்த போதிலும், இப்பாடசாலைகளில் இடவசதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பிள்ளைகளை அனுமதித்தல் மிகவும் சிரமமானதாக அமைந்துள்ளமையால், கண்டி நகரை அண்மித்துள்ள முதன்மையான பாடசாலைகளுக்கு, முதலாவது தரத்துக்கான வகுப்புக்களை நடாத்துவதற்காக புதிய கட்டடங்களை மிக விரைவில் நிர்மாணித்துக்கொடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா 159/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டி பல்லேகலே சுதந்திர வர்த்தக வலயத்தை முறைசார்ந்த விதத்தில் விரிவுபடுத்தல்,— கண்டி மாவட்டத்தில் தொழில் வாய்ப்பின்றி பெருமளவிலான இளைஞர் யுவதிகள் இருக்கின்ற காரணத்தினால், இவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை துரிதமாக வழங்குவதற்காக கண்டி பல்லேகலே பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு சுதந்திர வர்த்தக வலயங்களையும் முறைசார்ந்ததாக அமைத்து அதிகமானோருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுப்பதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா 160/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழுவை மீள தாபித்தல்,— ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் நிர்க்கதி நிலைக்குள்ளான மலைநாட்டில் வாழும் மக்களுக்கு நிவாரணமளிக்கும் பொருட்டு தாபிக்கப்பட்டிருந்த மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழு கடந்த ஆட்சிக் காலத்தின்போது செயலிழக்கச் செய்யப்பட்டிருந்த காரணத்தினால் மலைநாட்டு மக்களுக்கு நேர்ந்துள்ள அநீதிகளுக்கு நீதி வழங்குவதற்காக மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழுவை மீள முறைசார்ந்த விதத்தில் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.161/ '15

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— அகில இலங்கை மட்டத்தில் வெற்றிகளைப் பெற்றுள்ள விளையாட்டு வீரர்களுக்கு கல்வித்துறையில் நியமனம் வழங்குதல்,— அகில இலங்கை பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகள்/ இளைஞர் கழக விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் அகில இலங்கை மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற வீரர்களையும் குழுப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ள குழுக்களில் இடம்பெறும் விளையாட்டு வீரர்களையும் கல்வி அமைச்சில் விளையாட்டுத் துறை ஆசிரியர்களாகவும், விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களாகவும் பயிற்றுவித்து நியமனம் வழங்கும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.162/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— வட மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இலங்கை கல்வி நிருவாக சேவையின் விசேட பதவியணி வெற்றிடங்களை மூப்புரிமை மற்றும் திறமையை அடிப்படையாகக் கொண்டு நிரப்புதல் அத்துடன் போட்டிப் பரீட்சையிலிருந்து விடுவித்து III ஆம் தரத்திற்கு நியமித்தல்,— வட மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இலங்கை கல்வி நிருவாக சேவையின் விசேட பதவியணி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பில் சரியான பகுப்பாய்வை மேற்கொண்டு இப்பதவிகளுக்குரிய கடமைகளை நிறைவேற்றி வருகின்ற இலங்கை அதிபர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களின் மூப்புரிமையையும், திறமையையும் கவனத்திற்கொண்டு இவர்களை இலங்கை கல்வி நிருவாக சேவை போட்டிப் பரீட்சையிலிருந்து விடுவித்து கல்வி நிருவாக சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.163/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— வட மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளில் பதில் கடமையாற்றும் அதிபர்களை பாடசாலை அதிபர்களுக்கான போட்டிப்பரீட்சையில் இருந்து விடுவித்து அந்த உத்தியோகத்தர்களை பாடசாலை அதிபர் சேவையின் தரம் III இற்கு நியமித்தல்,— வட மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளில் நீண்ட காலமாக சேவையாற்றி வருகின்ற இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த பதில் கடமையாற்றும் அதிபர்களின் சேவை மூப்பு மற்றும் திறமை என்பற்றை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை பாடசாலை அதிபர் சேவையின் போட்டிப் பரீட்சையிலிருந்து விடுவித்து அந்த உத்தியோகத்தர்களை இலங்கை அதிபர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.